# இல்லம்
## செய்தி மடல்

VOLUME 1 | ISSUE 2008/1 | JANUARY - MARCH 2008


# வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டமும், அதனால் பயனாளிகளுக்கு ஏற்பட்ட சமூக, பொருளாதார செயல்பாட்டுத் தாக்கங்களும்

**வடக்கு** கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம், கடந்த 20 வருடங்களாக உள்நாட்டு யுத்தத்தினால் பாதிப்படைந்து, தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்களது மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தி, அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்வதை தனது மூல இலட்சியமாகக் கொண்டதாகும். இத்திட்டத்தின் நோக்கங்களாக.

- வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிப்படைந்த 34,784 வீடுகளை மீள்நிர்மாணம் செய்தல்.
- உத்தேச பயனாளிகளது வதிவிடக் காணிகளுக்கான, காணி உரிமைக்கான ஆவணங்களை வழங்குதல்.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத் தில் வாழ் கின்ற இளைஞர் யுவதிகளுக்கு கட்டிடத்துறையில் பயிற்சி வழங்குவதன் மூலம், நீண்டகால நோக்கில் அவர்களது சுயமேம்பாட்டுக்கான வழிவகைகளை செயல்படுத்தல் என்பனவாகும்.

2005 மார்ச் மாதம், ஆரம்ப நிதியாக உலக வங்கியின் கடனான 80.08 மில்லியன் அமெரிக்க டொலரும் (ரூ.8008மில்லியன்), இலங்கை அரசாங்கத்தின் உதவியாக 2 மில்லியன் டொலரும் (ரூ 200 மில்லியன்) உள்ளீடாகக் கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும் இத்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் நன்கொடையாக 8.68 மில்லியன் டொலரும் (ரூ.868 மில்லியன்), இலங்கை அரசாங்கம் 1.53 மில்லியன் டொலரும் (153 மில்லியன் ரூபா) மொத்தமாக 92.29 மில்லியன் டொலர் அல்லது 9229 மில்லியன் ரூபாவை திட்ட உள்ளீடாகக் கொண்டு, இச்செயல்பாட்டை 05 வருட கால எல்லைக்குள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக பாதிப்படைந்த மக்களுக்கு 34,784 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதும், 75,000 பாதிப்படைந்த குடும்பங்களுக்கான காணி உரிமைப் பத்திரங்களை வழங்குவதும் 1,202 இளைஞர்களுக்கு கட்டிடத் தொழில் துறைப் பயிற்சியளிப்பதையும் இலக்காகக் கொண்டதாகும்.

இத்திட்ட செயற்பாடு ஆரம்பிப்பதற்கு உள்ள அவர்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்களின் நிலைமையை அவதானிக்கும் பொழுது அவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்பவர்களாகவும், இது முல்லைத்தீவில் 69% மாகவும், கிளிநொச்சியில் 64%மாகவும், திருகோணமலையில் 57%மாகவும் இருந்தது அத்தோடு 70% வீதமானவர்களது ஜீவனோபாயம் கூலித் தொழிலாகவும், 56%மானவர்களது மாதாந்த வருமானம் ரூ.1000/- க்கு குறைவாகவும் இருந்தது. அத்தோடு 53%மானவர்கள் மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களாக இருந்ததோடு வேலையற்றவர்களது வீதம் 39% மாகவும் இருந்தது, 33% மானவர்கள் மாத்திரம் சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.
அவர்களது வாழ்விடநிலைமையைக் கவனத்தில் எடுப்பின் 2003 இல் நடைபெற்ற கள ஆய்வின்படி 326,000 வீடுகள் அழிக்கப்படிருந்தமையும் அவற்றில் 290,615 வீடுகள் மீள் நிர்மாணம் செய்யாத நிலையிலும் காணப்பட்டது.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த பெரும்பான்மையான மக்கள் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயரப்பட்டவர்களாக, தமது உயிரைப் பாதுகாப்பதற்காக, பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து, நலன்புரி நிலையங்களில் உள்ள தற்காலிக வதிவிடங்களில் அடிப்படை உணவு, உடை, சுகாதார, குடிநீர், கல்வி வசதிகளில்லாமலும் , நண்பர்கள் , உறவினர்களோடு அடிமட்ட வாழ்க்கையை வாழ்ந்து வந்ததாகக் களஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

அக்காலப்பகுதியில் அவர்களது மனித கௌரவம் இழக்கப்பட்ட நிலையில், சமூக வாழ்க்கை சிதைவடைந்து சுற்றத்தாராலும், அயலவராலும் , பல்வேறு விதமாக புறக்கணிக்கப்பட்டு தமது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக காணப்பட்டனர். வாழ்வாதார தொழில் இன்மை அவர்களது தங்கியிருக்கும் மனப்பான்மையை அதிகரித்ததுடன் அவர்களது வாழ்க்கைத்தரத்தையும் மேலும் பாதித்ததோடு நலிவுத்தன்மையையும் அதிகரித்தது.

இந்நிலையில், வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் இவ் நலிவடைந்த குடும்பங்களிலிந்து, 34,784 மிக நலிவடைந்த, வீடுகள் அழிவடைந்த குடும்பங்களை தெரிவு செய்து, அவர்களைக் கொண்டே அவர்களுக்கான நிரந்தரமான வீடொன்றினை மீள் நிர்மாணம் செய்யும் பணியை ஆரம்பித்தது – செயல்படுத்துகின்றது.

கடந்த 21/2 வருட இத்திட்டச் செயல்பாட்டு காலத்தில் இத்திட்டத்தின் மூலம்,

- 14,359 வீடுகள் மீளக் கட்டி முடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் அவ்வீடுகளில் மீளக் குடியேறி அங்கு வாழ்ந்து வருகின்றனர்.
- மேலும் 16,334 வீடுகள் மீளக் கட்டப்பட்டு வருகின்றன.
- 1224 இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழிற்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் 73,475 குடும்பங்கள், தாம் வாழும் காணிகளுக்கான, நில உரிமை ஆவணங்களைப் பெற்றுள்ளனர்.
- இத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட முழுநிதியில் 63% மானவை செலவிடப்பட்டுள்ளது.



காலஞ்சென்ற நீர்ப்பாசன அமைச்சர் மர்ஹூம் அன்வர் இஸ்மயில் அவர்கள் சம்மாந்துறையில் IIம் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ச்சி 2ம் பக்கம்......

## 1ம் பக்க தொடர்ச்சி..........

இந்நிலையில், இத்திட்டத்தின் கீழ் 2005, 2006ம் ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட 10,000 பயனாளிகளிகளிடையே தனியார் நிறுவனமொன்றினால் நடத்தப்பட்டதும் இத்திட்டத்தினால் ஏற்பட்ட பொருளாதார சமூக விளைவுகள் தொடர்பான ஆய்வுகளிலிருந்து பலமுடிவுகள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. அவை இத்திட்டத்தின் செயல்பாடு காரணமாக ஏற்பட்ட பயன்பாடுகளாகக் கொள்ளலாம் அவையாவன.

- 2005, 2006 வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளில் 81% மான அதாவது11,490 வீடுகள் கட்டி முடிவடைந்து அக்குடும்பங்கள் அவ்வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்- அதாவது குடும்பங்கள் நிரந்தர வீடுகளில் தங்களது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளமையாகும். இது அவர்களுக்கு வாழ்க்கையில் ஓர் புது நம்பிக்கையையும் எதிர்காலம் பற்றி நல்லெண்ணத்தையும் உருவாக்கியுள்ளது எனலாம். அத்தோடு, எதிர்காலத்தில் இடம் பெயரவேண்டிய சூழ்நிலை உருவாகினாலும் அதை தவிர்த்துக் கொள்ளும் மனப்பாங்கு அவர்களுக்குள் உருவாகுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

- கடந்த கால யுத்தம் மனித விழுமியங்களை பலமாகக் கேள்விக்குள்ளாக்கி “அகதிகள்” என்ற நிலையில் இருந்த குடும்பங்கள், இன்று மனித விழுமியங்கள் பாதுகாக்கப்படுவதற்கான நிரந்தர வசதிகளுடைய வீடுகளைப் பெற்றுள்ளதோடு , அது சமூக ஏற்றுக் கொள்ளலையும் ,மதிப்பையும் , கொடுத்துள்ளதாக அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

- குடும்பங்கள் நிரந்தர வீடுகளில் வசிப்பதன் காரணமாக, குடும்ப பாதுகாப்பு ஏற்பட்டுள்ளதுடன், குடும்ப அங்கத்தவர்களின் எதிர்பார்ப்புகளும் அதிகரித்ததுள்ளன, இது வீட்டுக்கான மேலதிகப் பாவனைப் பொருட்களை கொள்வளவு செய்யவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து , மற்றவர் களுக்கு சமமாக தாமும் அடிப்படை வசதிகளை தேடிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது அவர்கள் தமது ஓய்வு நேரத்தை பயன்தரு சமூக, கலாசார, சமய நிகழ்வுகளில் களிக்கக்கூடிய நிலையை உருவாக்கி தாமும் “சமூகப் பிராணிகள்” என்ற மன உணர்வை உருவாக்கியுள்ளது. அத்தோடு அவர்களது வாழ்க்கையில் புதிய விளக்கத்தையும், புதியசந்தர்ப்பங்களையும் உருவாக்கியுள்ளது.

- இவ் ஆய்வு, சராசரியாக வீட்டுக்கு வரும் அயலவர்களது தொகை 27% இலிருந்து 50% மாக அதிகரித்துள்ளதாக வெளிப்படுத்தியுள்ளது.

- மீள் குடியமர்ந்த மக்கள் தமது அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதையிட்டு மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் மேலதிக அடிப்படை சமூகத் தேவைகளான, போக்குவரத்து உட்கட்டுமாணம், மின்சாரம், சுத்தமான குடிநீர் மற்றும் தங்கள் வாழ்க்கைக்கான தொழில் முயற்சியைத் தேடுவதிலும் கூடிய அக்கறையை காட்டுவதாகத் தெரிவித்துள்ளனர்.

- வங்கிக் கணக்கை கையாளும் பழக்கம் . அநுபவத்தில் வந்ததன் காரணத்தினால், சேமிப்பில் அக்கறை அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. 50% மான பயனாளிகள் தொடர்ந்தும் வங்கிக்கணக்கைப் பேணி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

- வங்கிகளல்லாத ஏனைய நிதிமூலகங்களிடம் இருந்து பெறப்படும் கடன் அளவு 10%ஆல் குறைந்துள்ளதுடன், தமது எதிர்காலத் தேவைக்காக வங்கிக்கடனை நோக்கி செல்லும் குடும்பங்களது தொகை அதிகரித்துள்ளது.

- இக்குடும்பங்களது குடும்ப வருமானம், இவ்வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கணிசமான அளவு அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது திருகோணமலை மாவட்டத்தில் 96% வீதமான பயனாளிகளிடம் காணப்படுகிறது. குடும்பங்களது சராசரி வருடாந்த வருமானம் தலா ரூபா. 30,000 இலிருந்து 45,508 ஆக அதிகரித்துள்ளது.

- நிரந்தர கூரையும், சீமெந்தினாலான தரையும் கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்கியதுடன், பாடசாலை செல்லாதவர்களிடையேயும், வாசிப்பு பழக்கத்தை அதிகரித்துள்ளதாக வெளிக் கொணரப்பட்டுள்ளது. இது பாடசாலைகளில் மாணவர் தொகையை அதிகரிக்கும்.

- பெண்களது சமூக, குடும்பப்பங்கு குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரித்து இருப்பதை இக்குடும்பங்களிடையே நடாத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இதற்கு திட்டத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கூட்டு வங்கிக்கணக்கு முறை ,தமது வீடுகளை கட்டுவதில் பெண்கள் ஆற்றிய பங்கு என்பனவற்றால் உருவாகியதாகத் தெரிகின்றது.

இவைகளைக் கவனிக்கும் பொழுது இத்திட்டத்தின் செயற்பாடுகள், குறிப்பாக இத்திட்ட பயனாளிகளிடையே குறிப்பிடக்கூடியளவு சமூக பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தி, ஒட்டு மொத்தமாக , யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களிடையே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கொள்ளலாம்.

## ஐரோப்பிய ஆணைக்குழுவின் மேலதிக நிதி உதவி

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்துக்கு ஏற்கனவே 06 மில்லியன் யூரோக்களை, அரசாங்கத்துக்கு நன்கொடையாக ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருந்தது. இவ் நிதியிலிருந்து 3,514 வீடுகள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மீள் நிர்மாணம் செய்யப்படுகின்றன. இவ் முன்னேற்ற த்தை அவதானித்த ஐரோப்பிய ஒன்றியம் மேலதிகமாக 9.8 மில்லியன் யூரோக்களைஇலங்கை அரசாங்கத்தின் மூலம், இத்திட்டத்துக்கு நன்கொடை உதவியாக வழங்கியுள்ளது.



இம்மேலதிக நிதியைக் கொண்டு யுத்தத்தினால் சேதமடைந்த மேலும் 5,062 வீடுகளை புனர் நிர்மாணம் செய்வதற் கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளைத் திட்டப்பணிமனை செய்து வருகின்றது.

## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்துக்கு மேலதிக நிதியுதவி - இலங்கை அரசு கோரிக்கை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 2003ம் ஆண்டு செய்யப்பட்ட ஆய்வின்படி 2,90,615 வீடுகள் அழிவடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 34,784 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்காக நிதி உலக வங்கியினாலும் ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் இலங்கை அரசினாலும் வழங்கப்படும் நிதியுதவியைக் கொண்டு செயல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது. இது மொத்தத் தேவையின் 13% மாத்திரமேயாகும். இதனால் மிகுதி பாதிக்கப்பட்ட குடும்பங்களது தேவையை பூர்த்தி செய்யவேண்டிய தேவை அரசாங்கத்துக்குள்ளது. அத்துடன் 2006ம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வீடுகள் பாதிப்படைந்த பல குடும்பங்களது தேவையையும் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இவற்றை கவனத்தில் கொண்டு மேலதிக நிதி உதவியளிக்குமாறு உலக வங்கியிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது இத்தேவையின் முக்கியத்துவத்தை ஆராய்ந்த உலகவங்கி இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்காக மேலதிக நிதியாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு கொள்கையளவில் அனுமதியளித்துள்ளது.

இத்திட்ட செயற்படுத்துகை தொடர்பான கள ஆய்வினை மேற்கொள்ள உலக வங்கி நிபுணர் குழு விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது.

## வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு நிரந்தர வீடமைத்துத் தரும்படி - வவுனியா அரச அதிபர் கோரிக்கை

**க**டந்த கால இன முரண்பாடுகள் காரணமாக, குறிப்பாக 1979,1980,1983 ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்கள் காரணமாக, மலையக தோட்டங்களில் பணியாற்றிய பெருந்தொகையான குடும்பங்கள், தமது வாழ்விடங்களிலிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இவர்களில் கணிசமானவர்கள், வடக்கு மாகாணத்தின் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் அரச காணிகளில் குடியேறியிருந்தனர். அக்காலப்பகுதியில் இக் குடும்பங்களில் பெரும்பாலோருக்கு இலங்கைப் பிரஜாஉரிமையில்லாத காரணத்தால் அவர்கள் அத்துமீறி சுவீகரித்திருந்த அரச காணிகளுக்கான உரி மையை பெறமுடியாதவர்களாக இருந்தனர்.



பூந்தோட்ட அகதிமுகாம் - ஒருகாட்சி

1990ம் ஆண்டுக்குப் பின்னர் வட மாகாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இம்மக்களின் ஒரு பகுதியினர் இடம் பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட பூந்தோட்டம், சிதம்பரபுரம் போன்ற முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர் இவர்கள் கடந்த 17 வருடகாலமாக அடிப்படை வசதிகளின்றி கஸ்டமான வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். அவர்களைப் பராமரிப்பதற்காக அரசாங்கம் வருடம் தோறும் பல மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டு வருகின்றது.

தற்பொழுது, இக்குடும்பங்களுக்கான பிரஜா உரிமைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளதாலும், தொடர்ச்சியான முகாம் வாழ்க்கையால் பாதிக்கப்பட்டுள்ள இவர்களது வாழ்க்கையை விருத்தி செய்வதற்காக வவுனியா அரசாங்க அதிபர், இக் குடும்பங்களுக்கு அரச காணியைப் பகிர்ந்தளித்து நிரந்தரமாக குடியமர்த்தி வருகின்றனர்.

இவ்வாறு குடியமர்த்தப்படும் குடும்பங்களில் 5.000 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதி வழங்குவதற்கான நிதி நன்கொடையை வழங்கும்படி அவர் அண்மையில் மாவட்டத்துக்கு களப் பரசோதனைக்கு சென்ற உலக வங்கியின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார். இவ்விடயத்தை கவனத்தில் எடுத்த உலக வங்கிக் குழு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் உத்தேச இரண்டாம் கட்டத்தின் பொழுது இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்வதாகத் தெரிவித்துள்ளது.



வவுனியா அரச அதிபர் - உலகவங்கி நிறைவேற்று பணிப்பாளருடன்

## வீட்டு மானியத் தொகை ரூ.250,000 இலிருந்து ரூ.325,000ஆக அதிகரிப்பு 15,000 குடும்பங்களுக்கு நன்மை.

**வ**டக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான திட்டத்தின் நன்கொடை உதவி ரூ.250,000/- இலிருந்து ரூ.325,000/-ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் 2007ம் ஆண்டு கட்டம்III இல் பயனாளிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 15,000 குடும்பங்களும், 2008ம் வருடம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள 4,000 குடும்பங்களும் இதனால் உடனடியாக நன்மை பெறவுள்ளனர்.

இவ் அதிகரித்த நன்கொடையைப் பெறுவதற்கு பயனாளிகள் பூரணமடைந்த 500 சதுர அடிக்குக் குறையாத நிரந்தர வீட்டைக் கட்டி முடிப்பதுடன் பாவிப்பதற்கு ஏதுவான கழிவறையையும் தமது காணியில் கொண்டவராகவும் இருத்தல் வேண்டுமென்ற நிபந்நனை விதிக்கப் பட்டுள்ளது.

பகுதி சேதமடைந்த வீட்டை திருத்துவதற்கான நன்கொடை உதவி அதிகரிக்கப்படவில்லை.

**இவ் அதிகரிப்பின் காரணமாக கொடுப்பனவு நடைமுறை பின்வருமாறு அமையும்.**

| கட்டம் | ரூபா | நிபந்தனை |
|---|---|---|
| 1ம் | 50,000/- | பயனாளியாகத் தெரிவு செய்யப்பட்டு, வேண்டிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கட்டிட வேலையைத் தொடங்குவதற்கான முற்பணம். |
| 2ம் | 75,000/- | வீட்டுக்கானதும் கழிவறைக்குமான அத்திவாரக் கட்டுமானம் முடிவடைந்த பின்னர் - சுவர் கட்டுவதற்காக |
| 3ம் | 100,000/- | சுவர் (கழிவறையுட்பட) முடிவுற்று வீட்டுக்கூரை அமைப்பதற்காக வீடும், கழிவறையும் முடிவடைந்தபின்னர். |
| 4ம் | 70,000/- | வீடும், கழிவறையும் கட்டுமானம் பூரணமாக முடிவடைந்த பின்னர். |
| 5ம் | 30,000/- | வீட்டுச்சுவர் பூச்சு , தளம் போடுதல் , கதவு, யன்னல் முடிவடைந்த பின்னர். |
| மொத்தம் | 325,000/- | முழுமையடைந்த வீடு |

# IIIம் கட்ட (௨௦௦7) திட்ட செயலாக்கத்தில் முன்னணியில் நிகழும், திருகோணமலை, வவுனியா மாவட்டங்கள்

இத் திட்டத்தின் IIIம் கட்டத்தின் கீழ் ஏறக்குறைய 15,000 பயனாளிகள் தெரிவு செய்யத்திட்டமிடப்பட்டிருந்த பொழுதும், மொத்தமாக 12,962 பயனாளிகளே தெரிவு செய்யப்பட்டு, கட்டிட வேலைகளை ஆரம்பித்துள்ளனர். மீதி பயனாளிகள் யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள்.


31.12.2007 வரையிலான காலப்பகுதிக்கான நிதி செலவு செய்யப்பட்ட முன்னேற்றத்தை பார்க்கும் பொழுது, கள நிலைமை எவ்வாறிருப்பினும் வவுனியா, திருகோணமலை மாவட்டங்கள் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ் இரு மாவட்டங்களும் முறையே 94.6%, 84.6% ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கு பிரதி திட்ட பணிப்பாளர்களது சிறந்த திட்டமிடல், செயல்படுத்தும் திறமை, மேற்பார்வை, கட்டுப்பாடு என்பவற்றோடு பயனாளிகளோடு அவர்களுக்கிருந்த அன்னியோன்னிய தொடர்பு என்பன காரணங்களாக அமைந்துள்ளன.

**திட்ட நிதி செலவிடப்பட்ட முன்னேற்றம் 31.12.2007**

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட வீடுகள் | நிதி (ரூபா) | செலவிடப்பட்ட நிதி | வீதம்(%) | நிலை |
|---|---|---|---|---|---|
| வவுனியா | 737 | 184,250,000.00 | 174,300,000.00 | 94.6 | 1 |
| திருகோணமலை | 2079 | 519,750,000.00 | 439.970,000.00 | 84.6 | 2 |
| மட்டக்களப்பு | 4644 | 1,161,000,000.00 | 853,090,000.00 | 73.4 | 3 |
| மன்னார் | 863 | 215,750,000.00 | 130,630,000.00 | 60.5 | 4 |
| அம்பாறை | 2398 | 599,500,000.00 | 356,700,000.00 | 59.5 | 5 |
| யாழ்ப்பாணம் | 1982 | 495,500,000.00 | 299,700.000.00 | 20.0 | 6 |

## புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகள்

**வவுனியா**




**திருகோணமலை**



**மன்னார்**



**யாழ்ப்பாணம்**




**அம்பாறை**



**மட்டக்களப்பு**



## உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திட்ட செயல்படுத்தும் பகுதிகளுக்கு விஜயம்



உலக வங்கியின் தலைவருக்கு அடுத்த நிலையிலுள்ள உயர் அதிகாரியான முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.கிரோமி வீலிர் (Mr.GraemeWheelar), இலங்கையின் வதிவிடப்பி பிரதிநிதிசெல்வி நோகோ இசினி (Ms.Naoko Ishii) உடனும் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடனும் அண்மையில் வவுனியா மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

வவுனியா அரசாங்க அதிபர் திரு.S.சண்முகத்தினாலும் திட்டப் பணிப்பாளர்களினாலும் வரவேற்கப்பட்ட அதிதிகள், வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் எருக்கலங்கல் கிராமத்தில் இத் திட்டத்தினால் வழங்கப்படும் நிதியுதவியைக் கொண்டு பயனாளிகளால் கட்டப்பட்டு வரும் வீடுகளைப் பார்வையிட்டதோடு கட்டி முடிக்கப் பட்ட வீடு ஒன்றையும் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

பின்னர் கிராம மக்கள், பயனாளிகள், அரச பணி யாளர்களுடனான கலந்து ரையாடலிலும் பங்குபற்றினார்.



உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி , முகாமைத்துவ பணிப்பாளர் வவுனியா களப்பரிசோதனை

## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண அலகினால் மீள் நிர்மாணம் செய்யப்படும் சுனாமி வீடமைப்புத் திட்டங்கள்

உலகவங்கயின் நிதி உதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த 15 பிரதேச செயலர் பிரிவுகளில், இத்திட்டம் 2006ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் செயல்படுத்தும் பொறுப்பு மாவட்ட நிர்வாகத்தோடு சேர்ந்து வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்துக்கு வழங்கப்பட்டது. இதன்படி, முதலாம் கட்டத்தில் 18,745 முழுமையாகச் சேதமடைந்த வீடுகளும், கட்டம் II இல் 7,275 வீடுகளுமாக மொத்தமாக 26,020 வீடுகள் 31.12.2007 க்கு இடையே கட்டி முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. போக்குவரத்து கட்டுப்பாடு, கட்டிடப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, தொழிலாளர் பற்றாக்குறை என்பன கள நிலையில் காணப்பட்டபொழுதும், திட்ட பணியாளர்களதும், பயனாளிகளினதும் துரித முயற்சியின் காரணமாக 31.12.2007இல் 72% மான அதாவது 18,672 வீடுகள் முடிவடைந்துள்ளன.

### சுனாமி வீடமைப்பில் அடைந்துள்ள முன்னேற்றம் 31.12.2007

| மாவட்டம் | இலக்கு கட்டங்கள் | | | பெறுபேறுகள் கட்டங்கள் | | | % |
|---|---|---|---|---|---|---|---|
| | 1ம் | 2ம் | மொத்தம் | 1ம் | 2ம் | மொத்தம் | |
| அம்பாறை | 3,845 | 3,911 | 7,756 | 3,475 | 2,587 | 6,062 | 78% |
| மட்டக்களப்பு | 9,187 | 873 | 10,060 | 8,247 | 634 | 8,881 | 88% |
| முல்லைத்தீவு | 3,357 | 2,100 | 5,457 | 2,234 | 460 | 2,694 | 49% |
| யாழ்ப்பாணம | 2,354 | - | 2,354 | 975 | - | 975 | 41% |
| மொத்தம் | 18,743 | 6,884 | 25,627 | 14,931 | 3,681 | 18,612 | 72% |

நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## யாழ் மாவட்டப் பயனாளிகளுக்கு குறைந்த விலையில் கட்டிடப் பொருட்கள் விநியோகம்.



நிர்மாணப்பணிக்காக மொத்தமாக தருவிக்கப்பட்ட சீமேந்து பொதிகள் இறக்கப்படும் காட்சி

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 11,256 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ் கண்டி வீதிப் போக்குவரத்து தடை காரணமாக , மாவட்டத்துக்கு செல்லும் சகல பாவனை மூலப் பொருட்களும் கடல்மார்க்கமாக கப்பல்கள் மூலமே கொண்டு செல்ல வேண்டியேற்பட்டது. அரசாங்கக் கப்பல்களில் உணவுப் பொருட்களுக்கே முன்னுரிமையளிக்கப்பட்டதால் கட்டிடப் பொருட்களான சீமெந்து, இரும்புக் கம்பி, கூரை ஓடுகள் என்பனவற்றை யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கொண்டு செல்வதில் பாரிய சவாலை எதிர் நோக்க வேண்டியிருந்தது. அத்துடன் போக்குவரத்துச் செலவும் அதிகரித்துள்ளது.



நிர்மாணப்பணிக்காக மொத்தமாக தருவிக்கப்பட்ட சீமேந்து பொதிகள் இறக்கப்படும் காட்சி

தனியார் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்படும் பொருட்கள் மிக அதிகமான விலையில் வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதால், (உதாரணமாக சீமெந்து பொதி ரூ.2000/-) வெளிச்சந்தையில் கொள்வனவு செய்து யுத்தத்தால் நலிவடைந்துள்ள எமது பயனாளிகள், தமது வீடுகளை மீளக் கட்டி முடிக்க முடியாத நிலையேற்பட்டதை கள பரிசோதனை மூலம் தெரியவந்தது.அத்துடன் இவ்விடயத்தில் தலையிட்டு , பயனாளிகள் குறைந்த விலையில் கட்டிடப் பொருட்களைப் பெற உதவி செய்யும்படி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார். அதற்கேற்ப திட்ட முகாமைத்துவம் கடந்த வருடம், பெருமளவிலான கட்டிடப் பொருட்களை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அனுப்பி குறைந்த விலையில் பயனாளிகளுக்கு விநியோகித்துள்ளது.

| விநியோகித்த பொருட்கள் | தொகை விபரங்கள் | யாழ்ப்பாண வெளிச்சந்தை விலை ரூபா | திட்டத்தால் விநியோகிக்கப்பட்ட விலை ரூபா |
|---|---|---|---|
| சீமெந்து | 20,000 | 1,800-2,000 | 800/- |
| | 67,509 | 1,800-2,000 | 1,200/- |
| கூரைத்தகடு | 27,000 | ச.அடி – 230/- | 160/- |

இதன் மூலம் ஏறக்குறைய 1500 பயனாளிகள் தமது வீட்டு வேலைகளைச் செய்து முடித்துள்ளார்கள். இச் செயற் திட்டத்தினை இவ்வருடமும் தொடருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## திட்டச்செயற்பாட்டுக் கிராமங்களில் சூழல்பாதுகாப்புத் திட்டங்கள் 2007

2007ம் ஆண்டில் வடக்கு கிழக்கு வீடமைப்பு நடவடிக்கைகள் 6 மாவட்டங்களில் 498 கிராமங்களில் 15100 பயனாளிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இப் பயனாளிகள் யுத்தத்தால் தமது வாழ்விடங்களை இழந்து நலிவடைந்த குடும்பங்கள் ஆகும். இக் குடும்பங்களுக்கு பூரணவசதியுடைய வீடுகளுக்கான நிதியுதவியை இத்திட்டம் வழங்குவதோடு அவர்களது வாழ்விடம், சுற்றாடல் என்பனவற்றில் அழிந்துபோன இயற்கைச் சமநிலையை பேணுவதற்காக, நீண்ட ஆயுளைக்கொண்ட மரங்களை இலவசமாக அவர்களுக்கு வழங்கி, அவர்கள் மூலம் இவற்றை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் இரண்டாவது வருடமாக இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.



உலக வங்கி திட்டக் குழுத்தலைவர் திரு.நரேஸ் துரைசாமி அவர்கள் மரக்கன்று நாட்டுகின்றார்

இவ் இயற்கை சமநிலையை பாதுகாக்கும் திட்டத்தோடு, அப்பயனாளிகளினது வருமானத்தை நீண்ட காலத்தில் அதிகரிப்பதற்காக, இருவிதமான மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

- நீண்டகால வாழ்நாளைக்கொண்ட காட்டு மரங்களான மலைவேம்பு, தேக்கு, வேம்பு, சமண்டலை, கருங்காலி போன்றவை.
- மரத்தேவையோடு அதிலிருந்து வரும் கால, வருடாந்த பொருளா-தாரப்பயனைக் கொண்ட தென்னை, மரமுந்திரிகை, ஒட்டுமா, பலா, நெல்லி, கொய்யா மரங்களாகும்.

இச் செயற்பாடு தொடர்ந்தும் இத் திட்டக்காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும்.

**இத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் வழங்கப்பட்ட மரக்கன்றுகளது விபரம்:**

| | மாவட்டம் | திட்டக் கிராமங்கள் | சூழல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கிராமங்கள் | பயனாளிகள் | வழங்கப்பட்ட மரக்கன்றுகள் |
|---|---|---|---|---|---|
| 01 | மட்டக்களப்பு | 130 | 83 | 3079 | 18069 |
| 02 | அம்பாறை | 97 | 21 | 2812 | 2812 |
| 03 | திருகோணமலை | 71 | 64 | 2088 | 12336 |
| 04 | மன்னார் | 47 | 43 | 998 | 6043 |
| 05 | வவுனியா | 53 | 42 | 694 | 3977 |
| 06 | யாழ்ப்பாணம் | 10 | -- | -- | |
| | மொத்தம் | 498 | 253 | 9671 | 43837 |

## செயற்திட்ட செயற்பாட்டுக்கான வெளிநாட்டுப் பயிற்சியில் திட்டப் பணியாளர்கள்

செயற்திட்டங்களை இனம் காணுதல், திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் திட்டக் குறிகாட்டிகளை இனம்காணுதல், திட்டக் கண்காணிப்பு, ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் வெளிநாட்டில் குறுகிய கால பயிற்சிக்காக இவ்வருடம் திட்ட பணியாளர்களும், துறைசார் நிபுணர்கள், தாய்லாந்து , மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர்.

திட்டமிடல், முகாமைத்துறையில் துரித பயிற்சியை பெற்றதோடு வளர்ந்து வரும் 26 நாடுகளைச் சேர்ந்த துறைசார் நிபுணர்களோடு இப்பயிற்சியில் பங்கு பற்றி கருத்து பரிமாற்றம் காரணமாக வேண்டிய நுண்ணறிவை பெற்று அதனை எமது திட்ட செயல்பாட்டுக்காக செயலாற்றி வருகின்றனர்.



திரு.செ.பத்மநாதன்
திட்டப்பணிப்பாளர்



திரு.க.சுந்தரேசன்
பிரதி திட்டப்பணிப்பாளர்



திரு.வ.சத்தியசீலன்
பிரதி திட்டப்பணிப்பாளர்



Eng.க.மணிவண்ணன்
பொறியியல் நிபுணர்



திரு.ந .பிரளாநாவன்
முகாமைத்துவ தகவல் முறைமை நிபுணர்



திரு.த.பால முரளி
மாவட்டக் கணக்காளர்



Eng.தெ.தவராசா
மாவட்டப் பொறியியலாளர்

# வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தினால் உபயோகிக்கப்படும் உள்ளூர் கட்டுமாணப்பொருட்களும் அதன் வெற்றியும்.

கடந்த மூன்று வருடங்களில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டமானது ஏறக்குறைய 40 ஆயிரம் வீடுகளை கட்டிமுடித்துள்ளது. குறுகிய காலத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தில் இப்பாரிய கட்டுமாணப்பணியைச் செய்வதற்கு இப் பிரதேசத்தில் கட்டுமான மூலவளங்கள் போதிய அளவு இல்லை. மேலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கட்டுமாணப்பொருட்கள் கிடைப்பதால் இந்த கட்டுமாணப் பொருட்களுக்கு அதிக கிராக்கியையும் அதிக விலை உயர்வையும் ஏற்படுத்தும் என்று திட்டத்தின் முன்னோடி வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது உணரப்பட்டது.



சீமெந்து ,கிறவல்,மணல் கலந்த கட்டிட அரிவு கல்

இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டமானது உள்ளூரில் கிடைக்கும் பல மாற்று கட்டுமாணப் பொருட்களைப் பயன்புடுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றது. இந்த முயற்சிக்கு NERDC இன் பங்களிப்பும் பெறப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒவ்வொரு கட்டக் கட்டுமாணப் பணிக்கும் வெவ்வேறான திட்டங்கள் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எமது இவ் நடவடிக்கையினால் சில கட்டிடப்பொருட்களுக்கு குறிப்பிட்ட பிரதேசங்களில் கட்டுமாணத்தில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு தரமான வீடுகளை மலிவாக கட்டக் கூடியதாக இருக்கின்றது.

மணலிற்குள்ள தட்டுப்பாடு காரணமாக மணல் கலந்த சீமேந்துக் கற்களைப் பயன்படுத்தி வீட்டைக் கட்டுவது அதிக செலவுடையதாக காணப்படுகின்றது.

எமது திட்டமானது NERDC உடன் இணைந்து மேற்கொண்ட முயற்சியின் பயனாக கிறவல் சீமெந்து கலந்த கற்கள் எமது திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கல்லானது மணல் சீமெந்துக் கற்களின் உறுதியை விட 30% கூடிய உறுதியுடையதாகக் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் பல பிரதேசங்களில் இதற்கு தகுந்த கிறவல் காணப்படுவதால் பயனாளிகள் தங்கள் வீட்டிலேயே இந்த கற்களை அரிந்து மிகமிகக் குறைந்த செலவில் உறுதியான வீட்டைக் கட்டக்கூடியதாக உள்ளது. கிறவல் சீமெந்துக் கற்கள், மணல் சீமெந்துக்கற்கள் போலவே தரம் வாய்ந்தவையாக காணப்படுவதால் பக்க விளைவுகள் இல்லாமல் உள்ளது.

மற்றும் அத்திவாரத்திற்குப் பயன்படுத்தும் கருங்கற்களுக்கு சிறந்த மாற்றீட்டுக் கட்டுமாணப் பொருளாக கிறவல் கல் அடையாளம் காணப்பட்டுள்ளது.



கல் அரியும் நடைமுறை

இதற்கு பொருத்தமான கிறவல் இலகுவாகவே பயனாளிகளினாலேயே அடையாளம் காணும் வகையிலே பயனாளிகள் விசேட விதமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.


## இந்தக் கற்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளபடியினால் நாம் பெறும் நன்மைகள்.

1. கட்டுவேலையின் பொழுது கட்டுவேலைக்கு பயன்படும் ஆற்று மணல் கருங்கற்களுக்கான தட்டுப்பாடு குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் குறைக்கப்பட்டுள்ளது.
2. மணல் மற்றும் கருங்கற்களுக்கான விலையேற்றம் குறைக்கப்பட்டுள்ளது.
3. ஆற்றுமணல் அகழ்வினால் ஏற்படும் மண்ணரிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கிறவல் கலவை பயனாளிகள் தங்கள் வீட்டிலோ அல்லது தங்கள் நிலங்களிலோ பெறக்கூடியதாக உள்ளபடியால் தேவையில்லாத காலவிரயம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
5. பயனாளிகள் தங்களுக்கு கொடுக்கப்பட் நிதி அன்பளிப்புக்குள்ளேயே வீட்டைக் கட்டக்கூடியதாக உள்ளது.

## ஒரே அளவான சீமெந்து மணல் கலவை, கிறவல், மணல் கலவையினால் அரியப்பட்ட கற்களின் உறுதி விபரம்.

| | சீமெந்து மணல் கலவை | சீமெந்து கிறவல் மணல் |
|---|---|---|
| 1:8 கலவைக்கான உறுதித் தன்மை | 7 $N/mm^2$ | 10 $N/mm^2$ |
| 1:8 கலவைக்கான உறுதித் தன்மை | 5 $N/mm^2$ | 8.5 $N/mm^2$ |


## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி அடைவு முன்னேற்றம் 2004 – 2007







## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் மாவட்ட ரீதியான பௌதீக அடைவு மட்டம் 2004 – 2007





**வெளியீடு :** வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாகாண செயலகம்
68/4 A, மக்கெய்சர் அப்றோச் வீதி, உவர்மலை, திருகோணமலை

தொலைபேசி : 026- 2227536
தொலைநகல் : 026 -2220031
மின்அஞ்சல் : pdnehrp@sltnet.lk